**செய்தி வெளியீடு எண்: 143** **நாள்: 23.02.2018**

## செய்தி வெளியீடு

## மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக்காட்சி தொடக்க விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழா

கலை பண்பாட்டுத்துறையின் வாயிலாக, **2016–2017** ஆம் நிதியாண்டிற்கான மாநில அளவில் மரபுவழி (Traditional) மற்றும் நவீனப்பாணி பிரிவில் (Contemporary) ஓவிய சிற்பக் கலைக்காட்சி நடத்தி விருதுகள் வழங்குவது தொடர்பாக, தமிழ்நாட்டிலுள்ள ஓவிய சிற்பக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் வகையில் நாளிதழ்களில் செய்திகள் வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில், **332** ஓவிய, சிற்பக் கலைஞர்களிடமிருந்து **553** கலைப்படைப்புகள் பெறப்பட்டன. அக்கலைப்படைப்புகளிலிருந்து **121** கலைஞர்களின் **125** கலைப்படைப்புகள் அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவால் தெரிவு செய்யப்பட்டன.

கலை படைப்புகளை வழங்கிய **121** கலைஞர்களிலிருந்து மரபுவழி, நவீனப்பாணி கலைப்பிரிவுகளில் **60** கலைஞர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்பட்டனர். விருது பெறும் **60** கலைஞர்களில், மூத்தக் கலைஞர்கள் பிரிவில் **(30** வயதிற்குமேற்பட்ட**)** ரூ.**15,000/–**வீதம் **30** கலைஞர்களுக்கு ரூ.**4,50,000/–**க்கு பரிசுத் தொகையும், இளங்கலைஞர்கள் பிரிவில் **(30** வயதிற்குட்பட்ட**)** ரூ.**10,000/–**வீதம் **30** கலைஞர்களுக்கு ரூ.**3,00,000/–**க்கு பரிசுத் தொகையும் என ஒட்டுமொத்தமாக ரூ.**7.50** இலட்சத்திற்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்களால் **23.02.2018** அன்று சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் வழங்கப்பட்டது. முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில் கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் திரு எம்.பெருமாள் அவர்கள் வரவேற்புரை வழங்கவும், கலை பண்பாட்டுத்துறை ஆணையர்

திரு அ. இராமலிங்கம்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரை ஆற்றவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு முதன்மைச் செயலாளர்(பொ) திரு இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றவும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.நடராஜ் மற்றும் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் பிரமிளா குருமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு க.பாண்டியராஜன் அவர்கள் ஓவிய, சிற்பக் கண்காட்சியினைத் தொடங்கி வைத்து, விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். நிறைவாக கலை பண்பாட்டுத்துறையின் சேலம் மண்டல உதவி இயக்குநர் திரு பா.ஹேமநாதன் அவர்கள் நன்றியுரை ஆற்ற விழா இனிதே நிறைவுற்றது.

மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக்காட்சியை பொதுமக்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் கண்டுகளிக்க ஏதுவாக, சென்னை–600 028, டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் 23.02.2018 முதல் 27.02.2018 வரை ஐந்து நாட்கள் காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கலைக்காட்சி நடைபெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**